# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**
Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**
Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**
Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**
Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**
Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**
Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**
Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**
Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்
சி.ஆர்த்தி

தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை
பி.தீபாவதி

கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்
ந.ஸ்டாலின்

தமிழ்த் திரை இசைப் பாடல்கள்
கார்த்திக் க

நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்
ஜென்சி வை கி

இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்
சே. வனிதா

Historical And Archaeological Impact Of Palayarai
Dr.S.Neelavathy

Chola’s Temples As A Social Organization
A Study - S. Mala

A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple
M. Amirthavalli


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# தமிழ்

# பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை

## *Lifestyle of the people of ancient Tamil Nadu*

***Author: M. Durgadevi****(Reg.Num.: BDU2010632778750, Dt:07.12.2020)*

*Full-time Doctoral Researcher*

***Guide ; Dr. K Saravanan***

*Associate Professor*

*Department of Tamil Studies,*

*Government Arts College (Autonomous)*

*Karur- 639 007*

***Abstract:***

*Historians have two methods for understanding the ancient world. One is archaeology and the other is primary sources. Ancient history is the period from the time when history began to be written down to the early Middle Ages. The abstract describes the lifestyle, customs, beliefs, arts, professions, diet, language, race, and caste of the people of ancient times.*

***Keywords:*** *Meippai, slave, archaeology, source book, orangutan, chimpanzee, kotai, nalladai, pattaadi, antaran, king, vaishya, vellalar*

**கட்டுரையாளர்: ம. துர்க்காதேவி** *(Reg.Num.: BDU2010632778750, Dt:07.12.2020)*

முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்

**நெறியாளர்:முனைவர் க. சரவணன்**

இணைப்பேராசிரியர்

தமிழாய்வுத்துறை,

அரசுகலைக்கல்லூரி (தன்னாட்சி)

கரூர்- 639 007

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய உலகத்தை அறிந்து கொள்வதற்கு வரலாற்று அறிஞர்கள் இரண்டு வழிமுறைகளை கொண்டுள்ளனர். ஒன்று தொல்லியல் மற்றொன்று மூலநூல். வரலாற்றை எழுதத் தொடங்கிய காலம் முதல் ஆரம்ப இடைக்காலம் வரை உள்ள காலம் பண்டைய வரலாறு ஆகும். பண்டைய காலத்து மக்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கம், நம்பிக்கை, கலைகள், தொழில்முறை, உணவுமுறை, மொழி, இனம், சாதி, ஆகியவற்றை எவ்வாறு கையாண்டனர் என்பதனைப் ஆய்வுச்சுருக்கம் கூறுகின்றது.

**திறவுச்சொற்கள்:**

மெய்ப்பை, அடிமை, தொல்லியல், மூலநூல், உராங்உட்டான், சிம்பன்சி, கூறை, நல்லாடை, பட்டாடை, அந்தணர், அரசர், வைசியர், வேளாளர்

**முன்னுரை**

பண்டையகால கலாச்சாரத்தையும், பழக்கவழக்கங்களையும் உள்ளடக்கியே தமிழக மக்களின் வாழ்க்கை முறையை சித்தரிக்கின்றனர். தமிழ்கலாச்சாரமே, தமிழ்மக்களின் பண்பாடு ஆகும்.கலாச்சாரமானது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்களின் வாழ்க்கைவழிகளில்வேரூன்றி உள்ளது. தமிழ் கலாச்சாரம் என்பது மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக்கலை, தற்காப்புக்கலை, ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள், நகைச்சுவை, உணவு, ஆடைகள், கொண்டாட்டங்கள், தத்துவங்கள், மதங்கள், மரபுகள், சடங்குகள், நிறுவனங்கள், அறிவியலை மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.தமிழர் பண்பாடு தமிழ் மொழியின் ஊடாகவும்,தமிழர் தாயகப் பிணைப்பின் ஊடாகவும், தமிழர் மரபுகள்,வரலாறு, விழுமியங்கள்,கலைகள் ஊடாகவும் சமூக பொருளாதார அரசியல் தளங்கள் ஊடாகவும் பேணப்படும் தனித்துவப் பண்பாட்டு கூறுகளையும் குறிக்கின்றது. கலாச்சாரம் மற்றும் பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம், நாகரிகம், திருந்திய வாழ்க்கையாகும். நாகரிகம் சேர்ந்த பண்பாடும் உண்டு, நாகரிகம் இல்லாத பண்பாடும் உண்டு. இவை அனைத்தையும் உள்ளடக்கியதே தமிழக மக்களின் வாழ்க்கைமுறையாகும்.

**மனிதனின்தோற்றம்**

**“வய்த்ததுநந்தமக்குஈதோர்பிறவிமதித்திடுமின்”(நான்-திரு)** என்ற **திருநாவுக்கரசர்** வரிகளுக்கிணங்க மானிடப்பிறவி அப்படிபட்ட பிறவி இப்பிறவியை நன்றாக வாழவேண்டும். பிறரையும் வாழ்விக்க வேண்டும்.பாலூட்டி விலங்குகளில் அறிவுசார்ந்ததாக மனிதன் விளங்குகின்றான். குரங்கிலிருந்து தான் மனிதன் தோன்றினான் என்று பலரும் பலவிதமாக

கருத்துகணிப்பு கூறியுள்ளனர். அது முற்றிலும் சரியானதன்று. ஏனெனில் மனிதனைப் போன்று காட்சியளிக்கப்படும் உராங்உட்டான், சிம்பன்சி, கொரில்லா இவ்வினக்குரங்குகளின் ஒட்டுமொத்த சேர்க்கையாகவே மனிதன் காணப்படுகிறான். இருப்பினும், சிம்பன்ஸியின் மண்டையோடு கொரில்லாவின் கைகள் மற்றும் உராங்க்உட்டானின் மூளை இவை அனைத்துவடிவமும் மனித இனத்தைப் போன்று காட்சியளிக்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

மனித இனத்தோடு தொடர்புடைய இம்மூன்று குரங்கினைக்காட்டிலும் மேம்பட்ட உறுப்புகள் கைகள், சிந்தனை, குரல்வளம் ஆகியவற்றைப் பெற்றிருப்பவன் மனிதன். மனிதனும் குரங்கும் ஒரேமாதிரி வடிவமைப்பு உடையவர்கள் என்று நம் மூதாதையர்கள் கூறுவதை நாம் பொதுவான கருத்தாக கொள்ளலாம்.ஆகையால் மனிதனின் மூதாதையர்கள் குரங்குகள் அல்ல என்றும் குரங்குகளைப் போன்றவிலங்குகளே என்று கூறுகின்றனர்.

**பண்டையமக்களின்ஆடைமுறை**

ஆதிகால மனிதனின் ஆடைமுறை தோல் மற்றும் இலைகளினால் செய்யப்பட்டு அதனை உடுத்திவந்ததனர். காலப்போக்கில் மனிதன் அந்நிலையிலுருந்து மாறி ஆடவர் ஒரு ஆடையும் பெண்டிர் ஓர் ஆடையும் அணிந்து வந்தனர். அதனை புறநாநூற்றுப்பாடல் வழியில் காணலாம்.

**உண்பதுநாழி: உடுப்பவைஇரண்டே:**

**பிறவுமெல்லாம்ஒரொக்கும்மே.(புறம்-பா-189)**

இவ்வரிகளில் பண்டைகால மக்களின் ஆடைகளைகூறுகின்றனர்.

நீண்டகாலமாக ஒற்றை ஆடையை பெண்பாலர் உடுத்தியதாகவும், மக்களது நிலைக்கும் தகுதிக்கும் ஏற்றார் போல் இருந்ததாகவும் கூறுகின்றனர். கூறை, நல்லாடை, பட்டாடை போன்று மூன்று தரங்களாக பிரித்து அதனை, கூறை சாதாரண ஆடையாகவும் வறுமையினுள் வருந்திய ஒருவனது ஆடையாகவும் காட்சிப்படுத்துகிறது. தற்காலத்தில் இந்த சமூகத்தினர் இந்த ஆடைதான் அணிய வேண்டும் என்ற பாகுபாடு இல்லை. அந்நிலைமாறி யாருவேண்டுமானாலும் எப்படிபட்ட ஆடைகளை உடுத்தலாம் என்ற நிலை வந்துவிட்டது.

**வேற்றுஇழைநிழைந்தவேர்நனைசிதாஅர். (புறம்-பா-69)**

இப்பாடலில் மன்னர்களுடைய நல்லாடையாக கூறப்படுகிறது.

**போதுவிரிபகன்றைப்புதுமலர்அன்ன**

**அகன்றுமடிகலிங்கம். (புறம்-பா-393)**

சங்ককாலத்தில் பட்டாடை பற்றியும்,**“கொட்டைக்கரையபட்டுடைநல்கி”** பொருநராற்றுப்படையில் (155)பாடலும் காட்சிப்படுத்தப்படுகின்றனர்.

**புலிநிறக்கவசம்பூம்பொறிசிதைய**

**எய்கணைகிழித்தபகட்டெழில்மார்பிலன்**

**மறலியன்னகளிற்றுமிசையோனே. (புறம்-பா-13)**

தாங்கள் செய்து வந்த வேலைக்கு ஏற்றார்போல் தொழிலாளர்கள் ஒற்றை ஆடையை உடுத்திவந்ததாகவும் ,வீரர்கள் தங்களது மார்பில் கவசம் உடுத்திவந்ததாகவும் கூறுகின்றனர்.

**மெய்ப்பைபுக்கவெருவருந்தோற்றத்து**

**வலிபுணர்யாக்கைவனகண்யவனர். (முல்லை-பா-60)**

யவனர்களே முதன்முதலில் சட்டை அணிந்தவர் எனவும், அவரது சட்டைவகையை மெய்ப்பை என்றும் கூற்கின்றனர்.

**உணவுமுறை**

ஆதிகாலத்தில் மனிதன் உணவு உண்பதற்கு இயற்கையாக விளைந்த காய்கனிகளை பச்சையாக உண்டு வந்ததாகவும், பிறகு கற்களை ஒன்றோடு ஒன்று உராசினால் அதில்வரும் நெருப்பை வைத்து ருசிபார்த்து அதன்பின் விறகுவெட்டி நெருப்புமூட்டி காய்கனிகளை சமைத்து உண்பதாகவும் கூறப்படுகின்றனர்.

பதிற்றுப்பத்துபாடலில்

**“உண்மின்கள்ளே!அடுமின்சோறே!**

**ஏறிகதிற்றி!ஏற்றுமின்புழக்கே!**

**வருநர்க்குவரையாதுபொலங்கலம்தெளிர்ப்ப,**

**இருள்வணர்ஒலிவரும்புரிஅவிழ்ஐம்பால்.(பதிற்று-பா-18-1-6)**

கள்ளை உண்டும், சோற்றை சமைத்தும், கறியை அறுத்தும், கறிவகைகளை அடுப்பில் வேகவைத்தும் சாப்பிடுவதே இதன் பொருளாககூறப்படுகிறது.

**உயிரினும்சிறந்தன்றுநாணே; நாணினும்**

**செயிர்தீர்காட்சிக்கற்புச்சிறந்தன்று . (தொ-கள-நூ-1057)**

உடலை காத்துநிற்கும்உயிரைவிட பெண்மையின்நாணம்சிறந்தது.

பண்டையகாலத்து மக்கள் குடும்ப வாழ்வில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். ஏனெனில் மனைவியையும் அவர்கள்பால் பெற்றெடுத்த புதல்வனையும் பாதுகாக்க வேண்டுமென்பதில்.

மக்கட்பெறுதலை பெரும் நோக்கமாக கொண்டு**“மயக்குறும்மக்களைஇல்லோர்க்குப்பயக்குறைஇல்லைத்தாம்வாழும்நாளே”** என்று **(புறம்-பா-188)**பாடல்மூலம்பாண்டியன்அறிவுடைநம்பிகூறியுள்ளான்.

**மங்கலம்என்பமனைமாட்சிமற்றதன்**

**நன்கலம்நன்மக்கட்பேறு. (குறள்-60)**

அக்காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பொதுவான கருத்து இல்லை என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால் ஒருவனுக்கு மனைவியர் பலர் இருந்தாலும், அவர்களின் அனைவருடைய காதலுக்கும் கணவனாக இருந்தான். அவனது மனைவியாரை அன்போடு காத்து வந்தான். மேலும் இருபுறமும் காதல் இல்லாத மணம் தீஞ்செயலாக கூறப்படுகின்றனர்.

**ஏனதுசுவைப்பினும்நீகைதொட்டது**

**வானோர்அமிழ்தம்புரையுமால்எமக்கு! என.(தொ-கற்பு-நூ-5)**

மனைவியின் கடமைகளுள் சிறந்த ஒன்று விருந்துபோற்றுதல். தன் கணவனுக்கு அவள் கைப்பட உணவுசெய்து பரிமாறுவாள். கணவனும் நுகர்ந்து மகிழ்ந்தான்.

வீரவாழ்க்கையையே பெருவாழ்வாக இருந்தகையால் அக்காலப்பெண்கள் வீரர்களையே அதிகம் காதலித்து வந்தனர். (எடுத்துகாட்டாக) கப்பல் வியாபாரியாக இருந்த பெருங்கோழி நாயக்ன்மகள் ஆமூர்மல்லன் என்ற வீரனைக்காதலித்ததாக புறநானூற்றில் (83) பாடலில் குறிப்பிடப்படுகின்றது.

பண்டையகாலத்தில் காதலுக்கு அறிகுறியாக தாலிகட்டுதலும் முத்தமிடுதலும் இல்லை என்று கூறுகின்றனர்.**(புறம்-பா-246)**

பண்டையகாலத்திலும் அடிமைமக்கள் இருந்துவந்தனர் என்பதற்கு சான்றாக '**அடியோர்பாங்கினும்வினைவலர்பாங்கினும்**' என்றவரி (தொல்-அகத்-25) என்ற பாடல்வழியாகவும், '**அடிமை**' **(தொல்-சொல்-57)**என்ற சொல் தொல்காப்பியத்திலும் கூறுகின்றனர்.

தொல்காப்பியர்காலத்திலேயே நால்வகைசாதிகள் தமிழர்சமுதாயத்தில் இருந்ததாக கூறுகின்றனர். **அந்தணர், அரசர், வைசியர், வேளாளர்** இவ்வகுப்பினரை தொல்காப்பியச்சூத்திரங்கள் மூலம்**(மரபு-71,72,77,81)**பாடல்களில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இந்நால்வகைசாதிகளை மட்டுமே சமுதாயத்தின் அஸ்திவாரம் என்றும் சொல்லமுடியாது, ஏனெனில், தொழிலாற் பெயற்பெற்ற பலசாதிகளும் உள்ளன. கொல்லன், குயவன், வேட்டுவன், இடையன், மல்லன், கூத்தன், தச்சன், குறவன், பாணன், கடம்பன், துடியன், பறையன், புலையன், இவைகள் அனத்தும் புறநானூற்றில் (360) குறிப்பிடுகின்றார்.

**வைசிகன்பெறுமேவாணிகவாழ்க்கை. (தொல்-மரபு-நூ-73)**

தொல்காப்பியர் கருத்துப்படி நிலவழியாகவும், நீர்வழியாகவும் இவர்கள் வாணிகம் செய்து வந்ததாக இப்பாடல்வரிகள் மூலம் குறிப்பிடுகின்றார்.

சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் முகியமானதாக கல்விஇருந்ததாகவும், கல்வியாளர்களை பெரிதும் மதித்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

**"பிற்றைநிலைமுனியாதுகற்றல்நன்றே".(புறம்-பா-183)**

இப்பாடல் வரியின்மூலம் கல்வியின் பெருமையையும், இன்றியமையாமையும் எடுத்துக் கூறுகின்றார். மேலும் கல்வியை சாகுமளவும் கற்க வேண்டும் என்று பிற்காலத்து மக்களின் லட்சியமாக கருதப்படுகிறது.

**முடிவுரை**

மனிதன் ஆதிகாலத்தில் எவ்வாறு தோன்றினான், அவனின் உணவு, உடை, இருப்பிடம், தொழில் ஆகியவை என்னவாக இருக்கும் மற்றும் பண்டைய தமிழக மக்களின் வாழ்க்கை முறை, அவர்களின் பழக்கவழக்கம், உணவு, உடை, குடும்ப வாழ்க்கை, தொழில், கல்வி இவை அனைத்தும் எவ்விதமுறையில் கையாளுகின்றன என்பதையும், எடுத்துக்காட்டாக அவரவர் தேவைக்கு ஏற்றவாறு வாழ்ந்தாலும் பண்பாடு என்ற கட்டுக்குள் வாழவேண்டும் என்ற அடிப்படையில் கூறப்பட்டுள்ளன.

**சான்றென்விளக்கம்:**

1. புறநானூறு - பா-189
2. மேலது— பா-69
3. மேலது — பா-393

4. மேலது — பா-13
5. முல்லை — பா-60
6. பதிற்றுப்பத்து — பா-18-1-6
7. தொல்காப்பியம் — களவியல்-நூ-1057
8. புறநானூறு — பா-188
9. திருக்குறள் — 60
10. தொல்காப்பியம் — கற்பியல்-நூ-5
11. புறநானூறு — பா-246
12. தொல்காப்பியம் — சொல்-நூ-57
13. மேலது — மரபியல்-நூ-71,72,77,81
14. மேலது — மரபியல்-நூ-73
15. புறநானூறு — பா-183

**துணைநூற்பட்டியல்**

1.தமிழர் பண்பாடு, எஸ்.வையாபுரிப்பிள்ளை உரை,மங்கை அச்சகம்25, மாவடி விநாயகர் கோயில் தெரு, சென்னை-14

2.பண்டைய தமிழர் நாகரிகமும் பண்பாடும். ஞா.தேவநேயப் பாவாணர் உரை, தமிழ் வளர்ச்சி இயக்கம், எழும்பூர் சென்னை — 600 008

3.புறநானூறு, புலவர் இரா.இளங்குமரன் உரை வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17

4.பொருநராற்றுப்படை, ப. சரவணன் உரை, தமிழ்வளர்ச்சித்துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை-600006

5.முல்லைப்பாட்டு, க.பலராமன் உரை, ,தமிழ் வளர்ச்சித்துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை-600006

6.பதிற்றுப்பத்து, முனைவர். ஆலிஸ் உரை, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்) அம்பத்தூர், சென்னை-600098

7.தொல்காப்பியம், ஞா.மாணிக்கவாசகம் உரை, உமாபதிப்பகம், 18(171), பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-600001

8.திருக்குறள், பரிமேலழகர்உரை, 18(171) பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-600001

*Reference:*

*1.Tamil Culture, S. Vaiyapuri Pillai Text, Mangai Press 25, Mawadi Vinayagar Temple Street, Chennai-14*

*2.Ancient Tamil Civilization and Culture. Jna. Devaneyap Pavanar Text, Tamil Development Movement, Egmore Chennai — 600 008*

*3.Purananoor, Poet I. Ilangumaran Text, Varthamanan Publishing House, Chennai-17*

*4.Porunaratrupadai, P. Saravanan Text, Tamil Development Department, Tamil Nadu Textbook and Educational Services Corporation, Chennai-600006*

*5.Mullaippattu, K. Balaraman Text, Tamil Development Department, Tamil Nadu Textbook and Educational Services Corporation, Chennai-600006*

*6.Pathitruppattu, Dr. Alice Text, New Century Book House (B.Lit) Ambattur, Chennai-600098*

*7.Tholkappiyam, Nya.Manickavasagam Text, Uma Publishing House, 18(171), Pavalakara Street, Mannadi, Chennai-600001*

*8.Thirukkural, Parimelazhagar Text, 18(171) Pavalakara Street, Mannadi, Chennai-600001*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com